தரப்படுவதால் டிரைவர்கள் குற்றச் சாட்டுக்கு பதில் சொல்ல முடியாமல் தண்டிக்கப்படுவார்கள். அதைத் தவிர்க்க என்ன உத்தேசம்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அப்படி பதில் கூற சந்தர்ப்பம் அளிக்கவில்லை என்று குறிப்பாக எழுதி அனுப்பினால் அது பரிசீலனை செய்யப்படும். சாதாரணமாக ஓவர்லோடிங்கை தடுக்க கொஞ்சம் கடினமாகத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவகாசம் கொடுத்து, எக்ஸ்பிளனேஷன் கேட்டு, எக்ஸாமின் பண்ணிக் கொண்டு இருந்தால் உடனடியாக ஓவர்லோடிங்கை தவிர்க்க முடியாது. ஆனால் நடைமுறையில் ஏதாவது கஷ்டங்கள் இருந்தால் அது பற்றி எழுதி அனுப்பினால் அதைப் பரிசீலனை செய்யலாம்.

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, குற்றம் செய்யாதவர்கள் தண்டிக்கப்பட்டு விடுகிறார்கள். ஆகவே இதில் கவனம் செலுத்தப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: குற்றத்தை தடுக்க வேண்டும் என்பதில்தான் சர்க்காரின் முழு கவனமும் இருக்கிறது. அதை எப்படி நிறைவேற்றுவது என்பதில்தான் கஷ்டங்கள் இருக்கின்றன. ஒரு வண்டி ஓவர்லோடில் போகிறது என்றால் அங்கேயே அதைப் பிடித்து நடவடிக்கை எத்தால்தான் நலமாக இருக்கிறது. அதை விட்டு அவர்கள் மீது புகார் எழுதி எக்ஸ்பிளனேஷன் கேட்டு மெமோ கொடுத்து அதற்குப் பிறகு தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் ஓவர்லோடோடு வண்டி ஓடிக் கொண்டே இருக்கும், எக்ஸ்பிளனேஷன் மீது நடவடிக்கை எடுக்க எக்ஸாமினேஷன் நடந்து கொண்டே இருக்கும். குற்றத்தை தடுக்க முடியாது.

திரு. எம். எஸ். மணி: ஸார், லாரிகள் ஓவர்லோடு ஏற்றிச் செல்கிறது என்று குற்றம் சாட்டும் பொழுது அந்த லாரியின் உரிமையாளர்கள் தண்டிக்கப்படுகிறாரா அல்லது டிரைவர் தண்டிக்கப்படுகிறாரா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சட்டப்படி இரண்டு பேரையும் தண்டிக்கலாம்.

சென்னை உயர்நீதி மன்றத்தில் முடிவாகாமலுள்ள வழக்குகள்.

*104 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை உயர்நீதி மன்றத்தில் 1963 ஜூலை முடிய விசாரணை முடிவு பெறாமல் இருக்கும் சிவில், கிரிமினல் வழக்குகள் முறையே எத்தனை?

(இ) அவைகளில் (1) ஐந்தாண்டுகளாக முடிவு பெறாமல் இருக்கும் வழக்குகள் (2) மூன்றாண்டுகளாக முடிவு பெறாமல் இருக்கும் வழக்குகள் எத்தனை?

27th February 1964]

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: 1—7—1963 வரையில் முடிவு பெருமல் உள்ள சிவில் வழக்குகளின் மொத்த எண்ணிக்கை—

அப்பீல் வழக்குகள்	(Appellate side)	12,604
மூல வழக்குகள்	(Original Side)	747

1—7—1963 வரையில் முடிவு பெருமல் உள்ள கிரிமினல் வழக்குகளின் மொத்தம் எண்ணிக்கை—

அப்பீல் வழக்குகள்	2,452

ஐந்து ஆண்டுகளாக முடிவு பெருமல் உள்ள வழக்குகள்.—

(1) அப்பீல் வழக்குகள் (சிவில்)	162
(2) மூல வழக்குகள் (சிவில்)	40
(3) அப்பீல் வழக்குகள் (கிரிமினல்)	3

மூன்று ஆண்டுகளாக முடிவு பெருமல் உள்ள வழக்குகள்—

(1) அப்பீல் வழக்குகள் (சிவில்)	1,081
(2) மூல வழக்குகள் (சிவில்)	65
(3) அப்பீல் வழக்குகள் (கிரிமினல்)	19

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, வழக்குகளைத் தீர்ப்பதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: இது கோர்ட் சம்பந்தப்பட்ட காரியம். சிப் ஜஸ்டிஸ் அவர்கள் ஒரு கான்பிரன்ஸ் போட்டு சீக்கிரமாக காரியங்கள் நடைபெற வேண்டும் என்று நடவடிக்கை எடுத்திருக்கிருர்கள்.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, பெண்டிங் வழக்குகளைத் தீர்ப்பதற்காக தென் மாநிலங்களுக்காக மதுரையில் உயர் நீதி மன்றத்தின் ஒரு பிரிவை வைக்க சர்க்கார் ஆலோசிக்குமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: பல சிவில் வழக்குகளைப் பொறுத்த வரையில் பத்தாண்டுகளுக்கு மேல் ஆகியும்கூட, இன்னும் முடிவு பெருமல் இருக்கின்றன. எங்கே நீதி வேகமாக செலுத்தப்படவில்லையோ அங்கே நீதி மறுக்கப்படுகிறது என்று சொல்வதுண்டு. ஆகையால் இப்படி அதிகமாகக் காலதாமதம் ஆவதைத் தவிர்ப்பதற்காக பல புதிய கோர்ட்களைத் திறந்து வழக்குகளைத் துரிதமாகப் பைசல் செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கிற விரிவான கேள்விக்குப் பதில் சொல்வதைவிட, நான் முன்பு சொன்ன பதிலையே சொல்கிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிருர்கள்.

[27th February 1964

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நம்முடைய உயர்நீதி மன்றத்தில் நீதிபதிகளினுடைய எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை வந்ததா? அதை அரசாங்கம் பரிசீலனை செய்ததா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அதற்கெல்லாம் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : வழக்குகளைத் துரிதமாகப் பைசல் செய்வதற்கும், தீர்வு பெருமல் பாக்கியிருக்கக்கூடிய வழக்குகளைத் துரிதமாக முடிப்பதற்கும் என்ன யோசனைகள் பிரதம நீதிபதியிடமிருந்து அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அது பற்றி இப்போது என்னிடம் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

Gold Control Order

* 105 *Q.*—SRI K. CHEEMAICHAMY (on behalf of Sri P. K. MOOKIAH THEVAR): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have received any representation recently from the Madras Bullion Association for a realistic and genuine approach to the Gold Control Order; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) No such representation appears to have been received with this Government.

(*b*) The question does not arise.

திரு. க. ர. நல்லசிவம் : இது போன்ற ஒரு கோரிக்கை வரா விட்டாலுங்கூட, இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்துக்கொள் வதற்குத் திட்டவட்டமான முறைகள் ஏதாவது சர்க்கார் வைத் திருக்கிருர்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தங்க நகைகளை அடகு பிடித்தவர்கள், அடகு பிடித்த சாமான்களை ஏலம் போட்டு விற்க முடியவில்லை. தங்கக் கட்டுப்பாடு உத்தரவின் காரணமாக 14 காரட்டுக்கு மேல் உள்ளவற்றை விற்க முடியாது என்று இருந்தது. அடகு பிடித்தவற்றை ஏலத்தில் விற்க அனுமதிக்க வேண்டும் என்று ஒரு முக்கியமான கோரிக்கையாக இருந்தது. அதுபற்றி இந்த ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எழுதியதன் பேரில், அவர்களும் அதை மாற்றியிருக்கிருர்கள். அதுதான் அவர்கள் பொதுவாகச் சொன்ன முக்கிய கோரிக்கை. அது இப் பொழுது அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. சா. கணேசன் : சாதாரணமாக நகை செய்கின்ற பொற் கொல்லர்கள் தங்களிடம் வந்த நகையினுடைய காரட் விவரமும் அழித்த பிறகு இருந்த காரட் விவரமும், நகையாகச் செய்து